1981 பிப்ரவரி 5]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தற்போது அனாதைக் குழந்தைகள் என்று அழைக்கப்படுபவர்களை பராமரிக்கும் இல்லங்களுக்கு ஏற்கனவே டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் "கருணை இல்லங்கள்" என்ற பெயரால் அழைக்கப்பட்டன. அதை மாற்றுவதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, அதைப் பற்றிய விவரம் ஒன்றும் என்னிடத்தில் இல்லை. மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லாத காரணத்தால், தனிக் கேள்வி போடவும்.

* வினா எண். 200—திரு. என். பழனிவேல் மற்றும் திரு. செ. செம்மலை : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அனாதை குழந்தைகளை பாதுகாக்கும் இல்லங்கள் எங்கெங்கு உள்ளன?

(ஆ) அதில் பராமரிக்கப்பட்டு வரும் குழந்தைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) அரசு அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு உதவி செய்கிறது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) சென்னை, மதுரை கன்னியாகுமரி மற்றும் சேலம், ஆகிய மாவட்டங்களில் சமூக நலத்துறையால் நடத்தப் படுகின்றன. இதைத் தவிர தனியாரால் 94 இல்லங்கள் அனாதை குழந்தைகளுக்கென நடத்தப்படுகின்றன.

(ஆ)

சென்னை	165
மதுரை	157
கன்னியாகுமரி	54
சேலம்	111

தனியாரால் நடத்தப்படும் இல்லங்கள் 94, அவற்றில் குழந்தைகளின் எண்ணிக்கை 5,185. அது பற்றிய (விவரமான அறிக்கை தனியே அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

*[.. 243—249ம் பக்கத்தில் இணைப்பு 2 ஆக அச்சிடப்பெற்று உள்ளது].

[1981 பிப்ரவரி 5

(இ) ஒரு குழந்தைக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 487 செல வழிக்கப்படுகிறது.

அதாவது உணவு	.. ..	ரூ. 36 ஒரு மாதம்.
உடை	.. ..	ரூ. 35 ஆண்டுக்கு.
படுக்கை	.. ..	ரூ. 20 ஆண்டுக்கு.

இதைத் தவிர கல்வி வசதி 5-ம் வகுப்பு வரை இல்லத்திலும் 6-ம் வகுப்பிலிருந்து அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிகளுக்கு அனுப்பியும், மற்றும் மருத்துவ வசதிகளும் அளிக்கப்படுகின்றன,

*(தனியார் நடத்தும் அனாதை இல்லங்களுக்கு அளிக்கப்படும் உதவித்தொகை பற்றிய விவரமான அறிக்கை தனியே அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்தில் அனாதைக் குழந்தைகளுக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கிறார்கள் என்ற லிஸ்டை அமைச்சரவர்கள் இங்கே கொடுத்து இருக்கிறார்கள். அதில் சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் இன்று தனியார் இல்லத்தில் இருக்கிறார்கள் என்கிற விவரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தனியார்கள் அவர்களுக்குக் கொடுக்கும் உதவித் தொகையிலேதான்—அதாவது அவர்களுக்கு அளிக்கப்படுகிற ரூ. 36-லே தான் எல்லாச் செலவுகளையும் செய்கிறார்களா? அல்லது அவர்கள் ஏதேனும் தொகை போடுகிறார்களா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, தனியாருக்கு எவ்வளவு தரப்படுகிறது என்கிற விவரத்தை அறிக்கையாக அவைமுன் வைத்து இருக்கிறேன். அதைக் கண்டறிந்து கொள்ளலாம்.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற பாதுகாப்பு இல்லங்களில் பராமரிக்கப்படுகிறவர்கள் எந்த வயது வரை பராமரிக்கப்படுகிறார்கள்? அந்தப் பாதுகாப்பு இல்லங்களில் படித்த பிறகு, மேலும் படிப்பதற்கு வேண்டிய வசதிகள், ஏதாவது வேலை வாய்ப்புக்கள் ஆகியவற்றிற்கு வசதிகள் செய்து தரப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனாதைக் குழந்தைகள் சிறு குழந்தைகளாக இருக்கும் போது எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். நான் முன்பே பதிலில் குறிப்பிட்டபடி அவர்களுக்கு 5 ஆம் வகுப்பு வரை இல்லத்திலேயும், 6 ஆம் வகுப்பிற்கு மேல் மாநகராட்சி அல்லது அரசுப் பள்ளிகளுக்கு அனுப்பியும் அவர்களை நல்ல முறையில் படிக்க வைக்கிறோம். அவர்களுக்கு வேலை வாய்ப்பும் தகுந்த முறையில் ஏற்பாடு செய்து கொடுப்போம்.

249-250 ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது].

1981 பிப்ரவரி 5]

[முற்பகல் 10-20].

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, 36 ரூபாய் மாதத்திற்கு கொடுத்தால் அவர்களை எப்படி நன்றாக படிக்க வைக்க முடியும் அவர்களுடைய சாப்பாட்டுக்கே, இன்றைய விலைவாசியில், அது போதுமா? ஆகையால் தான் தனியார் ஏதாவது ஒரு பகுதி அதோடு போடுகிறார்களா என்று கேட்டேன். அமைச்சரவர்கள் அதற்கு விளக்கக் குறிப்பைப் பார்க்கச் சொன்னார்கள். அதில் இது பற்றி ஒன்றும் இல்லை. ஆகவே அதை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தனிக் கேள்வி போடவும்.

திரு. ஜே. எஸ். இராசு : * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பொதுவான ஒரு குற்றச் சாட்டாக இருப்பதால் அனுமதிப்பதற்கில்லை ; அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

வாக்காளர் பட்டியல்.

*குறுகிய கால வினா எண். 4—திரு. மி. வின்செண்ட் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 18 வயதானவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பணி முடிந்து விட்டதா?

(ஆ) எவ்வளவு வாக்காளர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்?

(இ) நகரப் பகுதிகளில் உள்ள 18 வயது அடைந்தவர்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) 36,17,036.

(இ) இல்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.